# வாக்குமூலம்
## முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 71/2020 |
| வழக்கு சாட்சி | : | PW18 |
| நாள் | : | 24.02.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜா | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | பாண்டுரங்கன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1, 2, 4 முதல் 6 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி இறப்பு.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் பொங்கனுர்கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டலில் சப்லையளராக வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. பஜ்ஜிகண்டை ரோட்டில் நான் ஓட்டல் நடத்தி வந்தேன். பொதட்டுர் பேட்டை காவல் நிலையத்திலிருந்து இரண்டு போலிசார்கள் வந்தார்கள் என்னிடம் செல்போனில் இரண்டு நபர்களை காண்பித்து இவர்கள் ஓட்டலுக்கு வந்தார்களா என கேட்டார்கள். அதில் இறந்த நபரின் படத்தை காண்பித்தார்கள் அவரை தெரியும் என்று சொன்னேன். எப்போது அழைத்தாலும் விசாரணைக்கு வர சொன்னார்கள். போலிசார் இது சம்மந்தாக என்னை விசாரணை செய்தார்கள்.

**கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை அரசு தரப்பு பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 01.03.2018ம் தேதி பகல் 2.30 மணிக்கு எங்கள் ஓட்டலில் தாங்கல் காலனியை சேர்ந்த தனசாமி வந்தார் என்றும், அப்போது ஓட்டலில் 3 நபர்கள் அங்கு சாப்பிட்டு தனசாமியை பார்ப்பதற்காக காத்திருந்தார் என்றும், தனசாமி வந்ததும் அவர்களும் தனசாமியும் பேசிக்கொண்டிருந்தார் என்றும், நான் தனசாமியிடம்யாா என்று கேட்ட போது பொம்ராஜகுருவை சேர்ந்த முரளி, ஜமுன மொரத்துர் சேர்ந்த சாமிநாதன் என்றும், திருத்தணி சேர்ந்த சுகுமார் என்ற

குட்டி என்றும் அவருடைய நண்பர்கள் என்று தனசாமி கூறினார் என்றும், அதேபோல் 3 நபர்களும் அந்த தேதிக்கு 10 நாட்கள் முன்பாக எங்கள் ஓட்டலில் சாப்பிட்டு விட்டு இறந்த தனசேகரிடம் பேசிவிட்டு சென்றார்கள் என்றம், அந்த நபர்கள திருட்டு தனமாக செம்மரம் வெட்டுபவர்கள் என்றும் தனசேகரை 01.03.2018 இரவு கொலை செய்வதாக கேள்விப்பட்டேன் என்று போலிஸ் விசாரணை கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

தற்போது நான் என்ன என்ன சொன்னேனோ அதை தான் போலிஸ் விசாரணையில் கூறினேன். போலிஸ் இறந்ததாக தான் என்னிடம் சொன்னார்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.

**வாக்குமூலம்**

**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்**

| | | |
|---|---|---|
| வழக்கு எண; | : | SC 71/2020 |
| வழக்கு சாட்சி | : | PW19 |
| நாள் | : | 03.03.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஏழுமலை | ஜாதி | : | |
| தந்தை– பெயர் | : | கோபால் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

1, 2, 4 முதல் 6 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி இறப்பு.

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தெக்கலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். தற்போது தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. திருத்தணி சேர்ந்த பாஸ்கர் என்பவரிடம் Tractor Driver வேலை செய்து வந்தேன். சுமார் அந்த காலத்தில் அதிகாலை 4.00 மணியளவில் நான் வீட்டிலிருந்து Tractor கூடிய தண்ணீர் டேங்க் உடன் திருத்தணிக்கு ஓட்டி வந்தேன். முரளி என்ற நபர் ஸ்கூட்டி  என்ற வண்டியை ஓட்டி வந்து Tractor பின்னால் மோதிவிட்டார். அப்போது தெரியாமல் மோதிவிட்டேன் என்றும் துக்ககலத்தில் இருந்ததால் மோதிவிட்டேன் என கூறினார். முரளி என்பவர் பொம்மராஜபுரத்தை சேர்ந்தவர். இது சம்மந்தமாக போலிஸ் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு வண்டி ஓட்டுவதற்கு லைசன்ஸ் கிடையாது. லைசன்ஸ் இல்லாமல் வண்டி ஓட்டுவதால் அடிக்கடி காவல் நிலையம் செல்லும் வழக்கம் உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தவிர வேறு எந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. நான் போலிசார் அடிக்கடி அழைத்தன் பேரில் நான் சாட்சியம் அளிக்க பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த வித சம்பவம் நடக்கவில்லை என்றாலும் போலிசார் கேட்டு கொண்டதற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு உண்மைலேயே

விபத்து நடந்திருந்தால் நானோ, அடிப்பட்டவரோ புகார் கொடுத்திருப்போம் என்றாலும், அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.